**பாடல் :** அல்லல் பல கடந்து வந்தோம்
**ராகம் :** நீலாம்பரி
**தாளம் :** தன்ன நானே தனன நன்னா…
**பாடல் இயற்றியவர் :** M.I. மஜீட்

**பல்லவி**

அல்லல் பல கடந்து வந்தோம்
நல்ல நிலையெதிர்பார்த்து நின்றோம்
வல்லரசு ஆகிடவே – வளமத்தனையும்
நாம் பெற்றிருந்தோம்

**சரணம் - I**

ஆங்கிலேயன் கவர்கையிலே – மனம்
தாங்காமல் கலங்கியெங்கள்
வேங்கைகள் குரலெழுப்ப – யாருமிங்கு
தேங்காமல் ஓடினரே…

முத்தானயெம் தேசம் - தன்
சொத்தான மைந்தர்களால் - யாரின்
எத்துதற்குமாளாகாமல்
நித்தமாயிருந்ததுவே (அல்லல் பல கடந்து…)

**சரணம் – II**

பாதாளக் குகைகளிலே – வாழும்
வேதாளப் பேய்கள் சில
வாதாக வந்தெம்மை
சேதித்துச் சென்றனரே

குறுக்கு வழிகள் கொண்டு
குள்ள நரிகள் செய்யும்
வெறுக்கும் செயலையின்று
நிறுத்த முடியாததனால்…

படித்தவனும் இங்குண்டு – நற்
பாமரனும் இங்குண்டு – பணம்
படைத்தவனும் இங்குண்டு – மிகை
பாரபட்சந் தானுண்டு

(அல்லல் பல கடந்து…)

**சரணம் - III**

கையூட்டெனும் கொடுக்கானின்
கைவரிசை தலை விரித்தால்
கையேற்றம் எமக்கில்லை - இப்பாரில்
கையேந்தல் துணிவாகும்

ஊழலற்ற தேசமொன்று
எழ வேண்டும் விரைவினிலே – என்
நாளமிங்கு துடிக்கிறது – அதையெம்
ஈழமதில் கண்டிடவே

இலஞ்சம் தவிர்த்தெங்கள்
நெஞ்சம் நிமிர்த்தி நின்று
பஞ்சமில்லாத் தேசமிதில்
அஞ்சமென வாழவேண்டும் - நெஞ்சில்
வஞ்சமின்றி வாழவேண்டும் - இங்கு
அஞ்சமென வாழவேண்டும் - நெஞ்சில்
வஞ்சமின்றி வாழவேண்டும் (அல்லல் பல கடந்து…)